## அரசு உயர்நிலைப்பள்ளி, ஆதமங்கலம், நாகை மாவட்டம் - 610 207

**பத்தாம் வகுப்பு - தமிழ் - 15 மாவட்டங்களில் நடைபெற்ற அரையாண்டுத் தேர்வு வினாத்தாள்களிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு மதிப்பெண் வினாக்கள் (சென்னை, கள்ளக்குறிச்சி, தருமபுரி, விருதுநகர், கன்னியாகுமரி, நாமக்கல், திருவண்ணாமலை, இராமநாதபுரம், அரியலூர், திருப்பூர், ஈரோடு, சிவகங்கை, மதுரை, சேலம், தென்காசி)**

சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.

1. கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது - இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே
   அ. பாடிய கேட்டவர் ஆ. கேட்டவர் பாடிய இ. கேட்டவர் பாடிய ஈ. பாடல் கேட்டவர்
2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ. துலா ஆ. சீலா இ. குலா ஈ. இலா
3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது?
   அ. அள்ளி முகர்ந்தால் ஆ. தளரப்பிணைத்தால் இ. இறுக்கி முடிச்சிட்டால் ஈ. காம்பு முறிந்தால்
4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம்
   அ. அகவற்பா ஆ. வெண்பா இ. வஞ்சிப்பா ஈ. கலிப்பா
5. நாகப்பட்டினம் என்ற ஊர்ப்பெயரின் மரூஉவைத் தேர்ந்தெடுக்க
   அ. நாகூர் ஆ. நாவலூர் இ. நாகை ஈ. நாகையூர்
6. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ................
   "அதோ, அங்கே நிற்கும்." என்று மற்றொருவர் கூறியது ................
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் விடை ஆ) அறிவினா, மறை விடை
   இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை
7. காசிக்காண்டம் என்பது
   அ. காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ. காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ. காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல் ஈ. காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
8. புதிரை விடுவிப்பதற்கான சொல்லைத் தேர்க
   புதிர் - நாலெழுத்தில் கண்சிமிட்டும் - கடையிரண்டில் நீந்திச் செல்லும்
   அ. நறுமணம் ஆ. புதுமை இ. காற்று ஈ. விண்மீன்
9. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது -
   அ. அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
   இ. அறிவியல் முன்னேற்றம் ஈ. வெளிநாட்டு முதலீடுகள்
10. எதிர்மறையாக மாற்றுக. எழுதாக் கவிதை .........
    அ. எழுதிய கவிதை ஆ. பாடிய கவிதை இ. பேசிய கவிதை ஈ. கூறிய கவிதை
11. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
    அ. குலை வகை ஆ. மணி வகை இ. கொழுந்து வகை ஈ. இலை வகை
12. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி - என்னும் அடியில் பாக்கம் என்பது
    அ. புத்தூர் ஆ. மூதூர் இ. பேரூர் ஈ. சிற்றூர்
13. குலசேகர ஆழ்வார் 'வித்துவக்கோட்டம்மா' என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே -
    அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
    இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இடவழுவமைதி

14. அருந்துணை என்பதைப் பிரித்தால் ..............

அ) அருமை + துணை ஆ) அரு + துணை இ) அருமை + இணை ஈ) அரு + இணை

15. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் ...............

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

16. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது

அ. திருக்குறள் ஆ. புறநானூறு இ. கம்பராமாயணம் ஈ. சிலப்பதிகாரம்

17. இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவினை வணிகன் ஆஅய் அல்லன் - என்ற வரிகள் இடம்பெற்ற நூல்

அ. அகநானூறு ஆ. மதுரைக்காஞ்சி இ. புறநானூறு ஈ. கலித்தொகை

18. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி

அ. உவமை ஆ. தற்குறிப்பேற்றம் இ. உருவகம் ஈ. தீவகம்

19. துகிர் என்ற சொல்லின் பொருள்

அ. பட்டு ஆ. பவளம் இ. பண்பு ஈ. படை

20. வினா .......... வகைப்படும்

அ. 6 ஆ. 8 இ. 10 ஈ. 4

21. எய்துவார் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்து வாய்பாடு எது?

அ. கூவிளம், தேமா, மலர் ஆ. தேமா, புளிமா, காசு

இ. கூவிளம், புளிமா, நாள் ஈ. புளிமா, தேமா, பிறப்பு

22. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ. எந் + தமிழ் + நா ஆ. எந்த + தமிழ் + நா இ. எம் + தமிழ் + நா ஈ. எந்தம் + தமிழ் + நா

23. <u>பெரியமீசை</u> சிரித்தார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ. பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை இ. அன்மொழித்தொகை ஈ. உம்மைத்தொகை

24. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெயர்

அ. வாட்சன் ஆ. பெப்பர் இ. எந்திரன் ஈ. இலா

25. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ..............., இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர்..........

அ. அமைச்சர், மன்னன் ஆ அமைச்சர், இறைவன்

இ. இறைவன், மன்னன் ஈ. மன்னன், இறைவன்

26. சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம்

அ. தற்காலம் ஆ. கற்காலம் இ. சங்க காலம் ஈ. இடைக்காலம்

27. தமிழின் முதல் அகராதியான சதுரகராதியை எழுதியவர்

அ. சீத்தலைச் சாத்தனார் ஆ. வீரமாமுனிவர் இ. ஜெயகாந்தன் ஈ. நாகூர் ரூமி

28. மெத்த வணிகலன் - என்னும் தொடரில் தமிழகனார் குறிப்பிடுவது

அ. வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் ஆ. பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ. ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ. வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

29. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி - என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?

அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ. கடல் நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்

30. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?

அ. குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ. இறைவனிடம் குலசேகராழ்வார்

இ. மருத்துவரிடம் நோயாளி ஈ. நோயாளியிடம் மருத்துவர்

31. மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் - என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி

அ. சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ. காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ. பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ. சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

32. சங்க நூல்களில் பண்ணோடு பாடப்பட்ட நூல்
அ. பத்துப்பாட்டு ஆ. நீதிவெண்பா இ. பரிபாடல் ஈ. நற்றிணை

33. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?

34. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் .........
அ. நாட்டைக் கைப்பற்றுதல் ஆ. ஆநிரை கவர்தல்
இ. வலிமையை நிலைநாட்டல் ஈ. கோட்டையை முற்றுகையிடல்

35. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் - இவ்வடி குறிப்பிடுவது
அ. காலம் மாறுவதை ஆ. வீட்டைத் துடைப்பதை
இ. இடையறாது அறப்பணி செய்தலை ஈ. வண்ணம் பூசுவதை

36. நாகூர் ரூமி ............... மாவட்டத்தில் பிறந்தவர்
அ. மதுரை ஆ. கோவை இ. தஞ்சை ஈ. சிவகங்கை

37. <u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிடப்பட்ட பகுதி குறிப்பிடுவது
அ. இலையும் சருகும் ஆ. தாளும் ஓலையும் இ. தோகையும் சண்டும் ஈ. சருகும் சண்டும்

38. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் யார்?
அ. அமைச்சர் ஆ. மன்னன் இ. இறைவன் ஈ. கபிலர்

39. ஞானம் எனும் கவிதை இடம் பெற்ற நூல்
அ. கோடைவயல் ஆ. மீட்சி விண்ணப்பம் இ. எழுத்து ஈ. காலக்கணிதம்

40. விடையின் வகைகள்
அ. 6 ஆ. 8 இ. 4 ஈ. 5

41. பரிபாடல் அடியில் **விசும்பும் இசையும்** என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது?
அ. வானத்தையும் பாட்டையும் ஆ. வானத்தையும் புகழையும்
இ. வானத்தையும் பூமியையும் ஈ. வானத்தையும் பேரொலியையும்

42. ஆசிரியரிடம், “இந்தக் கவிதையின் பொருள் யாது?” என்று மாணவர் கேட்பது
அ. அறிவினா ஆ. அறியா வினா இ. ஐய வினா ஈ. கொடை வினா

43. திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் ”பதலை திமிலைதுடி தம்பட்ட மும் பெருக” எனக் குறிப்பிடப்படும் இசை ஆட்டம்
அ. தப்பாட்டம் ஆ. புலி ஆட்டம் இ. காவடியாட்டம் ஈ. ஒயிலாட்டம்

44. சாகித்திய அகாதெமி விருது பெற்ற கண்ணதாசனின் புதினம்
அ. ஆட்டனத்தி ஆதிமந்தி ஆ. இயேசு காவியம்
இ. சேரமான் காதலி ஈ. அர்த்தமுள்ள இந்துமதம்

45. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது
அ. எழுவாய் ஆ. வேற்றுமை உருபு இ. உவம உருபு ஈ. உரிச்சொல்

46. மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில் - இக்குறளில் பயின்று வரும் அணி
அ. சொற்பொருள் பின்வருநிலையணி ஆ. வஞ்சப்புகழ்ச்சி அணி
இ. எடுத்துக்காட்டு உவமையணி ஈ. உவமையணி

47. சிவப்புச் சட்டை பேசினார் - இத்தொடரில் அமைந்துள்ள தொகையின் வகை
அ. பண்புத்தொகை ஆ. அன்மொழித்தொகை இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை

48. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள், வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம், மழைக்கு ஏங்கும் புவி, வெப்பப் பெருமூச்சு விடும், கசகசந்த உயிரினங்கள் - இத்தொடருக்கு ஏற்ற தலைப்பு

அ. வனத்தின் நடனம் ஆ. உயிர்ப்பின் ஏக்கம் இ. நீரின் சிலிர்ப்பு ஈ. காற்றின் பாடல்

49. **ஏழ்மை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ?** - இங்கு வேடன் என்ற சொல் யாரைக் குறிக்கிறது?

அ. இராமன் ஆ. இலக்குவன் இ. குகன் ஈ. கம்பன்

50. மேன்மை தரும் அறம் என்பது

அ. கைம்மாறு கருதாமல் அறம் செய்வது ஆ. புகழ் கருதி அறம் செய்வது

இ. மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது

ஈ. பதில் உதவி பெறுவதற்காக அறம் செய்வது

51. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது

அ. அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஆ. அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

இ. தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஈ. சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

52. உடன்பட்டுக் கூறும் விடை எது?

அ. ஏவல் விடை ஆ. நேர் விடை இ. மறை விடை ஈ. சுட்டுவிடை

53. பின்வருவனவற்றுள் முறையான தொடர்

அ. தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடம் உண்டு

ஆ. தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடம் உண்டு

இ. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடம் உண்டு

ஈ. தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடம் உண்டு

54. “எனக்கு எழுதித் தருகிறாயா?” என்ற வினாவுக்கு “எனக்கு யார் எழுதித் தருவார்கள்?” என்று விடையளிப்பது

அ. வினா எதிர் வினாதர் வினா ஆ. வினா எதிர் வினாதல் விடை

இ. உற்றது உரைத்தல் விடை ஈ. உற்றது உரைத்தல் வினா

55. துன்க காரரும் தோலின் துன்னரும் - இப்பாடலடி இடம்பெற்ற நூல்

அ. மணிமேகலை ஆ. தேம்பாவணி இ. கம்பராமாயணம் ஈ. சிலப்பதிகாரம்

56. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும், ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது

அ. தொழிற்பெயர் ஆ. வினையாலணையும் பெயர்

இ. பண்புப் பெயர் ஈ. விகுதி பெற்ற தொழிற்பெயர்

57. அனைவரின் பாராட்டுகளால், பாடகரின் முகம் வெட்கத்தால் ...............

அ. வெளுத்தது ஆ. கருத்தது இ. சிவந்தது ஈ. மலர்ந்தது

58. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை.................

அ. உரு ஆ. கரு இ. மரு ஈ. செறு

59. பாரதியார் பணியாற்றிய இதழ்கள்

அ. புதுவை முரசு, இந்தியா ஆ. இந்தியா, குயில்

இ. சுதேசமித்திரன், இந்தியா ஈ. குடியரசு, புதுவைமுரசு

60. யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது -

அ. முறை நிரல்நிறைப் பொருள்கோள் ஆ. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

இ. கொண்டு கூட்டுப் பொருள்கோள் ஈ. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

61. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ. தமிழ் ஆ. அறிவியல் இ. கல்வி ஈ. இலக்கியம்

62. பொருத்துக

| திணை | தொழில் |
|---|---|
| 1. குறிஞ்சி | அ. ஏறு தழுவுதல் |
| 2. முல்லை | ஆ. உப்பு விளைத்தல் |
| 3. மருதம் | இ. தேனெடுத்தல் |
| 4. நெய்தல் | ஈ. நெல்லரிதல் |

அ. 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ ஆ. 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-அ இ. 1-ஆ, 2-ஈ, 3-அ, 4-இ ஈ. 1-ஆ, 2-ஈ, 3-இ, 4-அ

63. பூக்கையைக் குவித்து பூவே புரிவோடு காக்க என்று ..................., ...................... வேண்டினார்
அ. கருணையன், எலிசபெத்துக்காக ஆ. எலிசபெத், தமக்காக
இ. கருணையன், பூக்களுக்காக ஈ. எலிசபெத், பூமிக்காக

64. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் .............. திருமொழியாக உள்ளது
அ. மூன்றாம் ஆ. நான்காம் இ. ஐந்தாம் ஈ. ஆறாம்

65. முன்பனிக் காலம் என்பது ................. மாதங்கள் நிலவும்
அ. ஆவணி, புரட்டாசி ஆ. ஐப்பசி, கார்த்திகை இ. மார்கழி, தை ஈ. மாசி, பங்குனி

66. ம.பொ.சிவஞானத்தின் எனது போராட்டம் என்னும் நூல் .............. வகையைச் சார்ந்தது
அ. வரலாற்று நூல் ஆ. தன்வரலாற்று நூல் இ. ஆய்வு நூல் ஈ. பயணவகை நூல்

67. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்
அ. உதியன்; சேரலாதன் ஆ. அதியன்; பெருஞ்சாத்தன்
இ. பேகன்; கிள்ளிவளவன் ஈ. நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி

68. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க
அ. உழவு, மண், ஏர், மாடு ஆ. மண், மாடு, ஏர், உழவு
இ. உழவு, ஏர், மண், மாடு ஈ. ஏர், உழவு, மாடு, மண்

69. **இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்** - இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ. தலையில் கல் சுமப்பது ஆ. பழைய காலம் இ. ஏழ்மை ஈ. தலைவிதி

70. நம் இந்திய நாட்டு, நடுவண் முதன்மை அமைச்சராக இருந்த திரு. வாஜ்பாய் அவர்களின் கைகளால் **பெண் ஆற்றல் விருது** பெற்றவர்
அ. எம்.எஸ். சுப்புலட்சுமி ஆ. பால சரஸ்வதி இ. ராஜம் கிருஷ்ணன் ஈ. சின்னப்பிள்ளை

71. **சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்** - என்று பாடியவர்
அ. கண்ணதாசன் ஆ. பாரதியார் இ. பாரதிதாசன் ஈ. கவிமணி

72. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி
அ. ஜால்ரா ஆ. பறை இ. உருமி ஈ. நாகசுரம்

## பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

**நும்இல் போல நில்லாது புக்கு,**
**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**
**சேட் புலம்பு அகல இனிய கூறி**
**பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையோடு**
**குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர்**

73. பாடல் இடம்பெற்றுள்ள நூலைத் தேர்க
அ. இரட்டுற மொழிதல் ஆ. முல்லைப்பாட்டு இ. மலைபடுகடாம் ஈ. நீதிவெண்பா
74. பாடலில் இடம் பெற்றுள்ள **இறடிப் பொம்மல்** என்பதன் பொருளைத் தேர்ந்தெடுக்க
அ. தினைச்சோறு ஆ. மாமிசப் பொரியல் இ. நெய்ச்சோறு ஈ. கம்மங்கூழ்
75. செய்யுள் அடிகளில் இடம்பெற்றுள்ள அளபெடைச் சொல்லைத் தேர்ந்தெடுக்க.
அ. கேளாது ஆ. பெறுகுவிர் இ. நில்லாது ஈ. கெழீஇ
76. பாடலிலிருந்து அடிமோனைச் சொற்களைத் தேர்க
அ. நும்இல் - நில்லாது ஆ. பொழிந்த - பொம்மல் இ. இறடி - பெறுகுவிர் ஈ. புலம்பு - அகல

***விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்***
***கரு வளர் வானத்து இசையில் தோன்றி,***
***உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;***
***உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்***

77. இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?
அ. சிலப்பதிகாரம் ஆ. பரிபாடல் இ. பெரியபுராணம் ஈ. கலித்தொகை
78. இப்பாடலின் ஆசிரியர்
அ. நல்லந்துவனார் ஆ. வள்ளுவர் இ. கபிலர் ஈ. கீரந்தையார்
79. அடிமோனைச் சீர்களை எடுத்து எழுதுக.
அ. ஊழி ஊழி ஆ. உரு உந்து இ. கருவளர் வானத்து ஈ. விசும்பில் வானத்து
80. வானம் என்னும் பொருள் தரும் சொல்
அ. வளி ஆ. இசை இ. விசும்பு ஈ. ஊழி
81. ஊழ் ஊழ் - இலக்கணக் குறிப்பு தருக.
அ. இரட்டைக்கிளவி ஆ. அடுக்குத்தொடர் இ. பண்புத்தொகை ஈ. வினைத்தொகை
82. ஊழி என்பதன் பொருள் யாது?
அ. யுகம் ஆ. வானம் இ. முறை ஈ. கதை
83. **விசும்பும் இசையும்** என்னும் தொடர் எதனைக் குறிக்கின்றது?
அ. வானத்தையும் பாட்டையும் ஆ. வானத்தையும் புகழையும்
இ. வானத்தையும் பூமியையும் ஈ. வானத்தையும் பேரொலியையும்

***அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,***
***கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து***
***சேந்த செயலைச் செப்பம் போகி***
***அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்***
***சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி***

84. பாடலில் கூத்தர் எந்த மன்னனிடம் பரிசு பெற்றார்
அ. குசேல பாண்டியன் ஆ. நன்னன் இ. முதலாம் ராசராசன் ஈ. அதியன்
85. சிற்றூர் எனப் பொருள் தரும் சொல்
அ. பாக்கம் ஆ. அல்கி இ. போகி ஈ. அலங்கு
86. அசைஇ என்பதன் இலக்கணக் குறிப்பு
அ. இன்னிசை அளபெடை ஆ. சொல்லிசை அளபெடை
இ. செய்யுளிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை
87. பாடல் இடம் பெற்ற நூல்
அ. நற்றிணை ஆ. காசிக்காண்டம் இ. முல்லைப்பாட்டு ஈ. மலைபடுகடாம்

88. பாடலின் ஆசிரியர்

அ. அதிவீரராம பாண்டியர் ஆ. குலசேகராழ்வார்

இ. இளையான்குடி மாறநாயனார் ஈ. பெருங்கௌசிகனார்

89. **நரலும்** என்னும் சொல் தரும் பொருள்

அ. ஒலிக்கும் ஆ. தங்கி இ. பள்ளம் ஈ. சுற்றம்

90. பாடலில் இடம்பெறும் அடிஎதுகை

அ. அன்று - கன்று ஆ. அன்று - அல்கி இ. கன்று - கடும்பொடு ஈ. அலங்கு - ஆரிப்படுகர்

***வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்***
***மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்***
***மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ***
***ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.***

91. இப்பாடல் இடம் பெறும் நூல் எது?

அ. பெருமாள் திருமொழி ஆ. தேம்பாவணி இ. பரிபாடல் ஈ. காசிக்காண்டம்

92. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ. கீரந்தையார் ஆ. கண்ணதாசன் இ. குலசேகராழ்வார் ஈ. தமிழகனார்

93. இப்பாடலடியில் இடம் பெறும் அடி எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

அ. வாளால், மாளாத ஆ. வாளால், சுடினும்

இ. மாளாத, மாயத்தால் ஈ. மருத்துவன், அடியேனே

94. மாளாத - பொருள் கூறுக

அ. சுட்டாலும் ஆ. தீராத இ. குறைந்த ஈ. விளையாட்டு

***முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்***
***மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்***
***அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு***
***இணைகிடந்த தேதமிழ் ஈண்டு***

95. இப்பாடலைப் படைத்தவர் யார்?

அ. அறிவழகனார் ஆ. அன்பழகனார் இ. தமிழகனார் ஈ. தமிழரசனார்

96. இப்பாடலில் ஒப்பிடப்படும் இரண்டு

அ. தமிழ், மேகம் ஆ. தமிழ், கடல் இ. தமிழ், வயல் ஈ. தமிழ், மயில்

97. துய்ப்பது என்பதன் பொருள்

அ. கற்பது, தருதல் ஆ. கற்பது, விழுதல் இ. கற்பது, துறப்பது ஈ. கற்பது, பறப்பது

98. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகைச் சொற்கள்

அ. முத்தமிழ், அணைகிடந்தே ஆ. மெத்த, இணைகிடந்தே

இ. அணைகிடந்தே, இணைகிடந்தே ஈ. மெத்த, அணைகிடந்தே

***அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்***
***சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி***
***நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்***
***மான விறல்வேள் வயிரியம் எனினே***

99. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

அ. கூத்தராற்றுப்படை ஆ. காசிக்காண்டம் இ. முல்லைப்பாட்டு ஈ. மெய்க்கீர்த்தி

100. சிலம்பு - பொருள் தருக

அ. ஓர் அணிகலன் ஆ. சிலம்பாட்டம் இ. சிலப்பதிகாரம் ஈ. மலை

101. இப்பாடலில் இடம் பெற்றுள்ள சீர்மோனை

அ. அலங்கு, சிலம்பு ஆ. நோனா, நோன்தாள் இ. சிலம்பு, பாக்கம் ஈ. நோனா, மான

102. எய்தி - இலக்கணக் குறிப்பு தருக.

அ. பெயரெச்சம் ஆ. வினையெச்சம் இ. பெயர்ச்சொல் ஈ. வினைச்சொல்

***பகர்வனர் திரிதரு நகர வீதியும்;***
***பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்***
***கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;***
***தூசும் துகிரும் ஆரமும் அகிலும்***

103. இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது?

அ. கம்பராமாயணம் ஆ. சிலப்பதிகாரம் இ. மெய்க்கீர்த்தி ஈ. காலக்கணிதம்

104. பாடலில் அமைந்த அடிமோனையை எடுத்து எழுதுக.

அ. பகர்வனர் - பட்டினும் ஆ. கட்டு - காருகர் இ. பட்டினும் - பருத்தி ஈ. தூசும் - துகிரும்

105. இப்பாடலை இயற்றியவர் யார்?

அ. கம்பர் ஆ. இளங்கோவடிகள் இ. ம.பொ.சிவஞானம் ஈ. வீரமாமுனிவர்

106. **காருகர்** - பொருள் தருக

அ. நெய்பவர் ஆ. விற்பவர் இ. ஓவியர் ஈ. கவிஞர்

***வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்***
***பூவும் புகையும் மேவிய விரையும்***
***பகர்வனர் திரிதரு நகர வீதியும்;***
***பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்***
***கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;***

107. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ. அதிவீரராம பாண்டியர் ஆ. இளங்கோவடிகள் இ. கண்ணதாசன் ஈ. கம்பர்

108. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்

அ. காசிக்காண்டம் ஆ. கொய்யாக்கனி இ. சிலப்பதிகாரம் ஈ. கம்பராமாயணம்

109. வண்ணமும் சுண்ணமும் - இலக்கணக் குறிப்பு

அ. எண்ணும்மை ஆ. வினைமுற்று இ. பெயரெச்சம் ஈ. தொழிற்பெயர்

110. விரை என்பதன் பொருள்

அ. மனம் ஆ. மணம் இ. உள்ளம் ஈ. மேகம்

**தொகுப்பு :**
**க. நாகராஜன், பட்டதாரி ஆசிரியர்,**
**அரசு உயர்நிலைப்பள்ளி, ஆதமங்கலம் - 610 207,**
**நாகை மாவட்டம் 8667552457, 7598868760**